NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2011

# TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours 100 marks

---

## PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY

1. This question paper consists of 6 pages.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions.
4. All answers must be in TAMIL.

---

IEB Copyright © 2011 

# பகுதி ஒன்று

## கட்டுரை

1. **கீழ்வரும் ஐந்து தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி சுமார் ஒரு பக்கம் அளவில் எழுதுக.**

**அல்லது**

**இரண்டைப் பற்றி அரை பக்கம் அளவில் (0.5) தனித்தனியாக எழுதுக.**

1.1 சந்தைக்குச் செல்லும் வழியில் நான் கண்ட ஒரு விபத்து.

1.2 எனக்குப் பிடிக்கும் விலங்குகள்.

1.3 கடற்கரையில் ஒரு மறக்க முடியாத நாள்.

1.4 எங்கள் புதியத் தமிழ் ஆசிரியர்.

1.5 பொங்கல் திருவிழா.

**30 marks**

IEB Copyright © 2011

# பகுதி இரண்டு

2. சரியான விடை அளிக்கவும்.

2.1 புதிதாகக் கிடைத்த உன் செல்லப் பிராணியைப் பற்றி (pet) உன் தோழனுக்கு / தோழிக்கு கடிதம் எழுதுக. (10)

2.2 உங்களுடைய வீட்டின் புத்தாண்டு விழாவிற்கு சில நண்பர்களை அழைக்க ஒரு தபால் அட்டையைத் தயாரிக்கவும். (10)

2.3 புதிதாகத் திறக்கப்படும் காய்கறிக் கடையில் (vegetable shop) வேலைச் செய்ய விரும்புகிறாய். இக்கடைக்கு விளம்பரம் (advert) ஒன்று தயாரித்துக் கொள்ளவும். காய்கறிக் கடையில் விற்கப்படும் ஐந்து காய்கறிகளின் பெயர்களை விளம்பரத்தில் எழுதுக. (10)

**30 marks**

## பகுதி மூன்று

3. **கீழ்வரும் பகுதியும் படமும் அடிப்படையில் வரும் கேள்விகளுக்கு விடை அளிக்கவும்.**

பயிற்சியின் இறுதிக் கட்டமாகப் பல வேடிக்கை விளையாட்டுகளும் நடத்தப்பட்டன. அந்த விளையாட்டுகளில் நானும் ஆர்வத்துடன் பங்கேற்றேன். போர்க் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பல விதிமுறைகளையும் அந்த விளையாட்டுகளின் மூலம் நான் அறிந்து கொண்டேன். குடிமைத் தற்காப்புப் படை வீரர்கள் பல வீரச்செயல்களைச் செய்து எங்களை வியப்பில் ஆழ்த்தினர். பயிற்சியில் கலந்துகொண்டவர்கள் தற்காப்புப் படையினரின் சேவையைப்பற்றிப் பெருமையாகப் பேசினர்.



3.1 **விடை அளிக்கவும்:**

3.1.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (1)

3.1.2 மேற்காணும் பகுதியிலிருந்து நான்கு பெயர்ச் சொற்கள் எழுதுக. (4)

3.1.3 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு வினைச்சொற்கள் எழுதுக. (2)

IEB Copyright © 2011

3.2 சேர்த்து எழுதுக:

3.2.1 தமிழ் + பெண் (1)

3.2.2 அந்த + பெண் (1)

3.2.3 இந்த + செடி (1)

3.2.4 அதை + கண்டான் (1)

3.3 பிரித்து எழுதுக:

3.3.1 அவனைப் பார் (1)

3.3.2 இதைப் படி (1)

3.3.3 இரண்டாயிரம் (1)

3.3.4 பெரியப் பெட்டி (1)

3.4 ஆண்பாலுக்குப் பெண்பால் தருக:

3.4.1 தந்தை (1)

3.4.2 தாத்தா (1)

3.4.3 மகன் (1)

3.4.4 செல்வன் (1)

3.4.5 சிறுவன் (1)

3.5 கீழ்வரும் நான்கு சொற்களில் எச்சொல் பொருத்தமானதல்ல?
Which word does not fit into the sets below?

3.5.1 வீடு பள்ளி நூல் கடை (2)

3.5.2 நாய் கிளி யானை குதிரை (2)

3.5.3 பத்து ஆறு இருபது முப்பது (2)

3.5.4 ஆடு மாடு காடு மான் (2)

3.5.5 பா வா பை மா (2)

IEB Copyright © 2011 

3.6 கீழ்வரும் வாக்கியங்களைச் சரியாக எழுதுக.

உம்: கடைக்குப் போனேன் நேற்று நான். = நான் நேற்று கடைக்குப் போனேன்.

3.6.1 வேகமாக ஓடும் பறவை இந்த. (2)

3.6.2 வீட்டு நாய், பூனை, பசு விலங்குகள். (2)

3.6.3 இது அப்பா எழுதிய நம் கடிதம். (2)

3.6.4 என்ன அதற்குக் கீழே எழுத வேண்டும் அக்காள்? (2)

3.6.5 அரசர் இருந்தார் முன்னொரு காலத்தில் ஒருவர். (2)

**40 marks**

**Total: 100 marks**

IEB Copyright © 2011